# தீபாவளீ நிர்ணயம்

**(ஸ்ரீ.உ.வே. வித்வான் மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி (வைகுண்டவாஸீ)**

ஸ்ம்ருதி ரத்நாகரத்திலும், ப்ரபந்ததர்மஸார ஸமுச்சயத்திலும், அப்யங்கஸ்நாத்திற்கு ப்ராத: காலத்தில் நிஷேதத்தைச் சொல்லி இந்த நிஷேதம் நரகசதுர்த்தசி தவிர மற்றநாளில்தான் என்று சொல்லும்போது

**प्रत्यूष आश्वयुग्दर्शे चतुर्दश्यामिनोदये । स्नानमभ्यज्य कर्तव्यं नरै र्नरकमीरुभिः ॥** என்று எடுத்த வசனத்தில் ஆச்வயுஜக்ருஷ்ணசதுர்தசியை தீபாவளிக்குக் காலமாகச் சொல்லியிருக்கிறது. வைத்யநாததீக்ஷிதீயம் ஆஹ்நிககாண்டத்திலும்,

**प्रत्यूष आश्वयुग्दर्शे चतुर्दश्यामिनोदये ।**
**स्नानमभ्यज्य कर्तव्यं नरै र्नरकभीरुभिः ॥**
**स्मृतिरत्नेपिः आश्वयुक्कृष्णपक्षे तु चतुर्दश्यामिनोदये ।**
**तैलाभ्यङ्गेन कर्तव्यं स्नानमुष्णेन वारिणा ॥**
**कालादर्शेपिः - प्रत्यूष आश्वयुग्दर्शे कृताभ्यङ्गादि मङ्गलः ।**
**भक्त्या संपूजयेल्लक्ष्मीमलक्ष्मीविनिवर्तये ॥**
**विष्णुपुराणेऽपिः- स्वातिस्थिते**
**रवाविन्दुर्यदि स्वातिगतो भवेत् ।**
**पञ्चत्वगुदकस्नायीं कृताभ्यङ्गविधिर्नरः ॥**
**नीराजितो महालक्ष्मीमर्चयन् श्रियमश्नुते ।**
**दीपैर्नीराजनादत्र दीपावलिरिति स्मृता ॥**
**सारसंग्रहेः- चतुर्दशीयाऽऽश्वयुजस्य**
**कृष्णा स्वात्यर्कयुक्ता च भवेत्प्रभाते ।**
**स्नानं समभ्यज्य नरैस्तुकार्यं**
**सुगन्धितैलेन विभूतिकामैः ॥**
**तैले लक्ष्मीर्जले गङ्गा दीपावलिदिने वसेत् ।**
**अलक्ष्मीपरिहारार्थमभ्यङ्गस्नानमाचरेत् ॥**
**तत आभरणं वस्त्रं धारयेत्सर्वसंपदे ॥**

என்கிற வசநங்களால், ஆச்வயுஜமாஸத்தின் க்ருஷ்ணசதுர்தசியிலே நரகசதுர்தசீ ஸ்நாநம் செய்யவேண்டும் என்றும், எண்ணெயில் லக்ஷ்மீயும், ஜலத்தில் கங்கையும் தீபாவளி தினத்தில் வாஸம் செய்கிறார்கள் என்றும், அலக்ஷ்மீபரிஹாரார்த்தமாக எண்ணெயில் ஸ்நாநம் செய்யவேண்டுமென்றும் சொல்லி இருக்கிறது. ஆக இவ்வசநங்களால் **ஆச்வயுஜமாஸம்** தான் தீபாவளிக்குக் காலம் என்று சொல்லப்படுகிறது.

ப்ரக்ருதவருஷத்தில் புரட்டாசி மாதத்தில் ஒரு ஆச்வயுஜமும், ஐப்பசி மாதத்தில் ஒரு ஆச்வயுஜமும் வருகிறது. முதலில் வரும் மாஸம் அதிமாஸமானாலும், ஒரு வருஷத்தில் இரண்டு அதிமாஸங்கள் ஸம்பவித்தால் அதில் முதலில் உள்ள அதிமாஸத்திற்கு மலமான தோஷம் கிடையாது.

**मासद्वयेऽब्दमध्ये तु संक्रान्तिर्न यदा भवेत् ।**
**प्राकृतस्तत्र पूर्वः स्यात् अधिमासस्तथोत्तरः ॥**

**प्राकृतः - मलामासदोषविकाररहित इत्यर्थः ॥** என்று சொல்லி அது கர்மாவுக்கு அர்ஹமென்று ஸ¬தீவிலோசநத்தில் ஸ்ரீஸார்வபௌமர் நிஷ்கர்ஷிக்கிறார். இம்மாதிரியே மற்ற நிபந்தநங்களிலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதை அநுஸரித்துத் தான் இவ்வருஷத்தின் மஹாநவமி, விஜயதசமி (நவராத்ரி)களை புரட்டாசி மாதத்திலேயே அநுஷ்டிக்க வேணுமென்று நிர்ணயிக்கப்பட்து. அம்மாதிரியே தீபாவளியையும் மலமாஸதோஷமற்றதான புரட்டாசி மாதத்திய 30ந் தேதியிலுள்ள ஆச்வயுஜ க்ருஷ்ணசதுர்தசியிலேயே அநுஷ்டிக்கலாமென்று ஸந்தேஹம் உண்டாகக்கூடும். ஆனால் இவ்விஷயத்தில் **துலா ஆச்வயுஜத்தில் தான் அநுஷ்டிக்கவேண்டுமென்று நிர்ணயம் செய்யப்படுகிறது.** ஏனெனில் மஹாநவமி, விஜயதசமிகளை எல்லா க்ரந்தங்களிலும் ஆச்வயுஜ சுக்லபக்ஷத்திலேயே விதித்திருக்கிறது. அம்மாதிரியே தீபாவளியையும் ஆச்வயுஜத்திலேயே செய்யவேண்டும் என்று எல்லாக்ரந்தங்களிலும்

விதித்திருந்தால் புரட்டாசி மாதத்திலேயே அதை நிர்ணயிக்கலாம். ஆனுல் சில வசநங்கள் கார்த்திக க்ருஷ்ண சதுர்தசியில் தீபாவளியை விதிக்கின்றன. நிர்ணயஸிந்துவில்:-

कार्तिककृष्णचतुर्दश्यां प्रभाते चन्द्रोदये अभ्यङ्गं कुर्यात् । तथा भविष्योत्तरे - कार्तिके कृष्णपक्षे तु चतुर्दश्यां विधूधये । अवश्यमेव कर्तव्यं स्नानं नरकभीरुभिः ॥ पूर्वविद्धचतुर्दश्यां कार्तिकस्य सितेतरे । पक्षे प्रत्यूषसमये स्नानं कुर्यात्प्रयत्नतः ॥

என்கிற வசநங்களால் பௌர்ணமாஸியை முடிவாகக்கொண்ட மாஸப்படிக்குக் கார்த்திக க்ருஷ்ணசதுர்தசியைக் காலமாகச் சொல்லி,

चतुर्दशीचाश्वयुजश्च कृष्णा स्वात्यृक्षयुक्ताच भवेत्प्रभाते ।
स्नानं समभ्यज्य नरैस्तु कार्यं सुगन्धितैलेन विभूतिकामैः ॥

என்கிற ஸ்ம்ருதி தர்ப்பண வசநத்திலும்,

आश्वयुक्कृष्णपक्षे च चतुर्दश्यां विधूदये ।
तिलतैलेन कर्तव्यं स्नानं नरकभीरुणा ॥

என்கிற பாத்மவசநத்திலும் ஆச்வயுஜமாஸத்தை அதற்குக் காலமாகச் சொல்லியிருப்பதால் இவ்வசநங்களுக்கு, முற்கூறிய கார்த்திக க்ருஷ்ணசதுர்தசியில் விதிக்கும் வசநங்களோடு விரோதத்தை ஸங்கித்து उभयत्र आश्वयुक इति अमावास्यान्तमासमभिप्रेत्योक्तम् । என்று பரிஹாரம் செய்யப்பட்டிருக்கிறது. அதாவது இவ்வசநங்களில் **ஆச்வயுஜம்** என்று அமாவாஸ்யையை முடிவாகக்கொண்ட மாஸத்தை மனதில் கொண்டு சொல்லப்பட்டது. அதுவே முற்கூறியபடி பூர்ணிமையை முடிவாகக்கொண்ட மாஸப்படி **கார்த்திக**மாகையால் விரோதமில்லை என்று.

இதை நன்கு பராமர்சித்தால் பூர்ணிமாந்தமாஸப்படி கார்த்திகமாய், தர்சாந்த மாஸப்படி **ஆச்வயுஜமான** துலாமாஸ ஆச்வயுஜமே தீபாவளிக்குக் காலமென்று ஏற்படும். புரட்டாசி மாஸத்திலுள்ள ஆச்வயுஜ க்ருஷ்ணசதுர்தசி பூர்ணிமாந்தமாஸப் படியும் ஆச்வயுஜமே தவிர கார்த்திகமாக ஆகாது.

மேலும் தசநிர்ணயத்தில் ஜயந்தீ ப்ரகரணத்தில் विष्णुरहस्ये अष्टमीकृष्णपक्षस्य रोहिण्यृक्षेण संयुता । भवेत्प्रोष्टपदे मासि जयन्तीनाम सा स्मृता ॥ परमसंहितायां श्रीवणे बहुळे पक्षे कृष्णाष्टम्यां विधूदये । प्राजापत्यृक्षसंयुक्ता जयन्ती सा तु कथ्यते ॥

என்கிற வசநங்களில், பாத்ரபத க்ருஷ்ணஷ்டமி ஜயந்தீ என்றும், ச்ராவண க்ருஷ்ணஷ்டமி ஜயந்தீ என்றும் சொல்லியிருப்பதால், இவைகளுக்கு வ்யவஸ்தையைச் செய்வதற்காக ஸ்ரீஸார்வபௌமர் - ब्रह्मसंहितायाः - अथातः संप्रवक्ष्यामि जयन्ती निर्णयं परम् । सिंहराशिगते सूर्ये गगने जलदाकुले ॥

मासि प्रोष्ठपदेऽष्टम्यामर्धरात्रे विधूदये । वसुदेवेन देवक्यामहं जातोस्मि पद्मज ॥

என்கிற வசநத்தை அநுஸரித்து ஸிம்ஹமாஸம் தான் க்ருஷ்ணவதாரகாலமானபடியால் முற்கூறிய வசநங்களிலுள்ள ச்ராவண பாத்ரபதசப்தங்கள். ஸிம்ஹச்ராவணத்தையும் ஸிம்ஹ பாத்ரபதத்தையுமே குறிப்பிடுகின்றன. ஆகையால் ஆடி மாஸத்தில் ச்ராவண க்ருஷ்ணஷ்டமி ஸம்பவித்தாலும், புரட்டாசி மாஸத்தில் ப்ரௌஷ்டபத க்ருஷ்ணஷ்டமி ஸம்பவித்தாலும் அவற்றில் **ஜயந்தீ** கிடையாது. ஸிம்ஹச்ராவணியிலோ ஸிம்ஹபாத்ரபதியிலோதான் அனுஷ்டிக்கவேண்டும் என்று நிர்ணயித்திருக்கிறுர். அம்மாதிரியே ப்ரக்ருதத்திலும் சில வசநங்களில் ஸாமாந்யமாக ஆச்வயுஜ சப்தமிருந்தாலும் கார்த்திக க்ருஷ்ண சதுர்தசி என்று பூர்ணிமாந்தமாஸப்படியுள்ள வசநத்தை அநுஸரித்தும், நிர்ணயஸிந்துவிலேயே தீபாவளியில் (காம்யமாய்) அனுஷ்டிக்கும் ப்ரகரணத்தைச் சொல்லும் ஸந்தர்பத்தில் உதாஹரித்த तुलासंस्थे सहस्रांशौ प्रदोषे भूतदर्शयोः । उल्का हस्ता नराः कुर्युः पितृणां मार्गदर्शनम् ॥ என்கிற ஜோதிச்சாஸ்த்ரவசநத்தில் तुलासंस्थे सहस्रांशौ என்று வ்யக்தமாக இருப்பதாலும் **துலாமாஸத்திய ஆச்வயுஜமே** தீபாவளிக்குக் காலம் என்று ஏற்படுகிறபடியால் இவ்வருஷத்திய தீபாவளியை ஐப்பசி மாதம் 29ந்தேதி (நவம்பர் - 15உ) வெள்ளிக்கிழமையிலேயே அநுஷ்டிப்பது உசிதமாகும்.

வைத்யநாததீக்ஷிதீயத்தில் உதாஹரிக்கப்பட்ட விஷ்ணுபுராண வசனத்திலுள்ள स्वात्यर्के என்கிறதும் (துலாமாஸத்தில்தான் ஸ்வாதியில் ஶூந்யதிதி ஸம்பாவிதமாகையால்) துலாமாஸத்திற்கு ஜ்ஞாபகமாகும். ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர் அருளிய ஆஹ்நிக க்ரந்த புத்தகத்தில் அநுபந்தம் பக்கம் 110-111ல் உள்ளவற்றையும் கீழே தருகிறேம்.

நிர்ணயஸிந்துவில் உள்ள வசனங்கள் -

कार्त्तिकि कृष्णपक्षे तु चतुर्दश्यामिनोदये ।अवश्यमेव कर्तव्यं स्नानं नरकभीरुभिः ॥ (इनः - चन्द्रः)

पूर्वविद्धचतुर्दश्यां कार्त्तिकस्य सितेतरे । पक्षे प्रत्यूषसमये स्नानं कुर्यात् प्रयत्नतः ॥ स्मृतिदर्पणेऽपि -

चतुर्दशी चाश्वयुजस्य कृष्णा स्वात्यृक्षयुक्ता च भवेत् प्रभाते ।

स्नानं समभ्यज्य नरैस्तु कार्यं सुगन्धितैलेन निभूतिकामैः । इति ।

पाद्मे - आश्वयुक्कृष्णपक्षस्य चतर्दश्यां विधूदये । तिलतैलेन कर्तव्यं स्नानं नरकभीरुणा ॥ इति ।

उभयत्र आश्वयुक् इत्यमावास्यान्तं मासमभिप्रेत्योक्तम् । दिनद्वयेऽपि चन्द्रोदये चतुर्दशीसत्त्वे तदभावेपि अरुणोदये संपूर्णे खण्डे वा दिनद्वय चतुर्दशी समत्वे च पूर्वदिनेऽभ्यङ्गं कुर्यात्; पूर्वविद्ध चतुर्दश्याम् इति वचनात् । पूर्वदिने परदिन एव वा सैव ग्राह्या । दिनद्वयेऽप्यसत्त्वेऽरुणोदयव्यापिनी ग्राह्या, 'पक्षे प्रत्यूषसमये' इत्युक्तेः । अत एव सर्वज्ञनारायणः -

तथा कृष्णचतुर्दश्यामाश्विनेऽर्कोदयात् पुरा । यामिन्याः पश्चिमे यामे तैलाभ्यङ्गो विशिष्यते ॥ इति

இப்படி எல்லா வசனங்களிலும் **ஆஶ்வயுக்** மாஸத்தில் என்றே சொல்லப்பட்டிருக்கிறது. அநேகமாக தீபாவளி துலா (ஐப்பசி) மாஸத்திலேயே ஸம்பவிக்கிறது. முன்பு ஒரு வருஷத்தில் ஐப்பசி 1ந்தேதி ஒரு அமாவாஸ்யையும், கார்த்திகை மாஸம் ஒரு அமாவாஸ்யையுமாக வந்தது. அப்பொழுது புரட்டாசி மாஸம் 30ந் தேதியன்று வந்த சதுர்தஶீ ஆஶ்வயுக் க்ருஷ்ண சதுர்தஶியாகையால் முன் காட்டிய வசனங்களை அநுஸரித்துச் சில பஞ்சாங்கங்களில் புரட்டாசி 30ந் தேதியன்றே தீபாவளி என்று ப்ரசுரித்து விட்டார்கள். 28ம் நெம்பர் பஞ்சாங்கம் முதலியவற்றில் ஐப்பசிமாஸம் கடைசித் தேதியில் வந்த க்ருஷ்ண சதுர்தஶியில் தீபாவளி குறிப்பிட்டிருந்தது. இவ்விஷயத்தை ஸ்ரீ.உ.வே.நாவல்பாக்கம் ஸ்வாமியை நேரில் ஸேவித்து விசாரித்ததில் புரட்டாசியில் தீபாவளி என்று ஒரு நாளும்





கேட்டதில்லை. வசனங்களில் **ஆஶ்வயுஜம்** என்றிருப்பதும் ஐப்பசி மாஸத்தில் அமாவாஸ்யை வரும்போது ஸம்பவிக்குமாகையால் அந்த அபிப்ராயத்தில் கூறப்பட்டுள்ளது என்றே கொள்ள வேண்டும் என்றும், துலாமாஸத்திய க்ருஷ்ணசதுர்தஶியில்தான் தீபாவளி அனுஷ்டானம் என்றும் ஸாதித்தாயிற்று. அந்த வருஷம் ஸ்வாமி நியமித்தபடியேதான் நடந்தது என்று ஸ்ரீ.உ.வே.மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி எழுதியுள்ளார்.

ஸ்ரீ.உ.வே.சுண்டைப்பாளையம் ராமபத்ராசார்ய ஸ்வாமி அருளிய ஆஹ்நிகஶேஷத்திலும் இவ்வாறே தீபாவளி நிர்ணயத்தை அருளியுள்ளார்.

आश्वयुज कृष्णचतुर्दायां चन्द्रोदये अभ्यङ्गः कार्यः । केषुचिद्वचनेषु **कार्तिककृष्णचतुर्दश्याम्** इति वाक्यं पूर्णिमान्तमासमभिप्रेत्योक्तम् । तथैव निर्णयसिन्धूक्तेः । तादृशमासस्य नर्मदोत्तरदेशविषयत्वादस्मिन् देशे दर्शान्तचान्द्रमासरीत्या आश्वयुज कृष्णचतुर्दश्येव नरकचतुर्दशी । दिनद्वये चन्द्रोदयकाले चतुर्दश्यास्सत्त्वे, असत्त्वेऽपि पूर्वदिनमेव ग्राह्यम् । पूर्वदिने परदिने वा यस्मिन् दिने चन्द्रोदयकाले चतुर्दशी वर्तते तस्यामेवाभ्यङ्गः कार्यः । दिनद्वयेऽपि सत्त्वे अरुणोदयव्यापिनी ग्राह्या; **प्रत्यूषसमये** इत्युक्तेः । दिनद्वयेऽप्यरुणोदये चतुर्दशीसाम्येऽपि पूर्वदिनमेव; **पूर्वविद्धचतुर्दश्याम्** इति वचनात् । पूर्वदिने चन्द्रोदये चतुर्दश्यभावेऽपि स्नानकरणपक्षे चतुर्दश्यागमनात् परं सूर्योदयात् पूर्वम् अभ्यङ्गः कार्यः । एवमेव परदिनग्रहणपक्षे दर्शागमात् पूर्वमेव उषःकाले वा, चन्द्रोदयकाले वा, अरुणोदयकाले वा, अन्ततो गत्वा रात्रिचतुर्थयामे वा, चतुर्दशीकाले एवाभ्यङ्गः कार्यः । चतुर्दशी चतुर्थयाम - अरुणोदयकाल - चन्द्रोदयकालानाम् उत्तरोत्तरम् उत्कृष्टत्वम् अवधेयम् । येन केनापि प्रकारेण त्रयोदशीकाले, दर्शकाले चाभ्यङ्गः सर्वथा निषिद्धः ।

तत्र स्वातीनक्षत्रयोगः प्रायिकः । तस्मात् तन्नक्षत्रस्य योगे अयोगेऽपि पूर्वोक्तकाल एव ग्राह्यः । तत्तद्रात्रिमानानुरोधेन चन्द्रोदयकालम् ऊह्य, तत्र चतुर्दशीसत्त्व-असत्त्वादिकं विमृश्य तत्तद्दिनं ग्राह्यम् ।

**तादृशादिनस्य सङ्क्रमणादिदोषेऽपि न बाधः। प्रत्यवायानुक्तेः।**

**एतन्नरकचतुर्दशीस्नानं नित्यमिति केचित्। मातृ-पितृदीक्षा-शावाशौच-श्राद्ध व्रतादिदिनेष्वेतन्नरकचतुर्दशीस्नानस्य अकरणाद् अनिषिद्धकाम्यम् इति केचित्। यथारुचि ग्राह्यम्। तस्मिन् दिने सायंकाले आलयादिषु दीपदानस्योक्तत्वात् दीपावलिः ! इति संज्ञा। तत्र अपामार्गादिभ्रमण यम-भीष्मतर्पणादिकम् अनुष्ठानाभावान्नोक्तम्।**

ஐப்பசி மாஸத்திய க்ருஷ்ண சதுர்தஶீ ஸ்நாநம் நரகத்தை ஒழிப்பதால், நரகத்தைக் கண்டு அஞ்சும் முமுக்ஷுக்களாலும் அனுஷ்டிக்கப்படுவதால் **நரக சதுர்தஶீ ஸ்நாநம்** என்று பெயர் பெற்றது என்றே தர்ம ஶாஸ்த்ரங்கள் கூறுகின்றன. நரகாஸுரனை க்ருஷ்ணன் கொன்ற தினம் இது என்றும், இறக்கும் ஸமயத்தில் நரகாஸுரன் தான் இறந்த இந்த நாளை யாவரும் பண்டிகையாகக் கொண்டாடவேண்டும் என்று அவன் வேண்டிக் கொண்டதாகவும், பகவானும் அப்படியே அது ஒரு பண்டிகை நாளாகும் என்று வரம் வழங்கியதாகவும் ஆகவேதான் இதற்கு **நரகசதுர்தஶீ** என்று பெயர் வந்ததாகவும் பாத்மோத்தர புராணத்தில் இருப்பதாகக் கூறுகின்றனர். த்ரயோதஶி திதியிலோ அமாவாஸ்யை திதியிலோ இந்த ஸ்நானத்தைச் செய்யக் கூடாது. சதுர்தஶி திதியிலேயேதான் செய்ய வேண்டும். மாதாபிதாக்களின் மரணதீக்ஷையிலும், இறப்புத்தீட்டுக்களிலும் ஶ்ராத்தம் முதலான வ்ரத தினங்களிலும் இந்த நரகசதுர்தஶீ ஸ்நாநத்தைச் செய்யக்கூடாது. நெருங்கின பந்துக்களின் மரணவருஷத்திலும்கூட இதைச் செய்வதில்லை.

அன்று மாலையில் பகவத் ஸந்நிதியில் தீபதானம் செய்யும்படி அதாவது வரிசையாக விளக்குகளை ஏற்றி வைக்கும்படி ஶாஸ்த்ரங்களில் சொல்லியுள்ளபடியால் இதற்கு தீபாவளி என்ற பெயரும் உண்டாயிற்று என்ற சில விஶேஷாம்சங்கள் ஆஹ்நிக ஶேஷத்திலிருந்து அறியலாகின்றன.

குறிப்பு:- அனைத்து பஞ்சாங்கங்களிலும் விரோதி ஢ புரட்டாசி மீ 30 (16.10.09) வெள்ளிக்கிழமை பின்னிரவு நரக சதுர்த்தசி ஸ்நானம் என்றும் புரட்டாசி மீ 31 (17.10.09) சனிக்கிழமை அதிகாலை தீபாவளிப்பண்டிகை என்றும் போட்டுள்ளனர்.

இவ்விஷயத்தில் ஸ்ரீ.உ.வே.மேல்பாக்கம் நரஸிம்ஹாசார்யரால் சோபக்ருத் ஢ ஐப்பசி மீ (1963ல்) **தீபாவளி நிர்ணயம்** என்ற தலைப்பில் தீர்மானிக்கப்பட்டதை இங்கே தந்திருக்கிறோம். மேலும் ப்ரக்ருதம் ஸ்ரீமதழகியசிங்கர் அருளிய ஆஹ்நிக க்ரந்தத்தில் அநுபந்தம் பக்கம் 110 - 111ல் ஸ்ரீ.உ.வே.சுண்டைப்பாளையம் ராமபத்ராசார்ய ஸ்வாமி அருளிய ஆஹ்நிக சேஷத்தில் குறிப்பிட்டுள்ளதையும் தந்துள்ளோம். மஹநீயர்கள் இதை பராமர்ஶித்து ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா அலுவலகத்திற்குத் தெரிவிக்கவேணுமாய் ப்ரார்த்திக்கிறோம்.

இந்த வருடம் தீபாவளிப் பண்டிகையை ஐப்பசி (துலா) மாதத்தில் 28ந்தேதி (14.11.2009) சனிக்கிழமை பின்னிரவு தீபாவளி (நரக சதுர்த்தசி) ஸ்நானம் பண்ணவேண்டும். (தீபாவளிக்கு பின்மாலையில் சதுர்த்தசி இருக்கவேண்டும்). பண்டிகை 15.11.09 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை கொண்டாடவேண்டும் என்று ஸ்ரீமதழகியசிங்கர் திருவுள்ளம். அதன்படி ஸ்ரீஸந்நிதி ஸம்ப்ரதாயத்தினர் அநுஷ்டிக்க வேணும் என ப்ரார்த்திக்கிறோம்.

**ஸம்பாதகர்கள்.**

## ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹ திவ்யபாதுகாஸேவக ஸ்ரீவண்சடகோப ஸ்ரீரங்கநாத சடகோப யதீந்த்ர மஹாதேசிகன் (40வது பட்டம்) ப்ருந்தாவன ப்ரதிஷ்டாதின மஹோத்ஸவம்.

துவரிமான் அக்ரஹாரத்தில் ந்ருஸிம்ஹமந்த்ரஸித்தி பெற்ற 40வதுபட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் ப்ரதிஷ்டாதின மஹோத்ஸவம் 03.07.09 ஏகாதசியன்று காலை விசேஷ திருமஞ்ஜனம், ஸேவை சாற்றுமறை, கோஷ்டி விநியோகம், மாலை வீதிப் புறப்பாடுடன் விசேஷமாக நடைபெற்றது. மறுநாள் த்வாதசியன்று ததீயாராதனத்துடன் திருமஞ்ஜனம், திருக்கல்யாண உற்சவங்கள் கோயிலில் நடந்தன. அக்ரஹாரவாஸிகள் யாவரும் ஒன்றாகக் கலந்து இவ்வுத்ஸவத்தை நன்கு நடத்தினர். ஆராதகர்கள் ஸ்வாமிகளும், கார்யதரிசி ஸ்ரீமான் S. வெங்கட்ராமனும் ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தனர். குறிப்பாக இளைஞர்கள் பலரும் இக்கைங்கர்யத்தில் ஈடுபட்டு வருவது விசேஷம்.

**கார்யதரிசி.**